## தினமலர் (14.12.2020)

# மருத்துவ உதவி வழங்கும் விழா

வேலாயுதம்பாளையம், டிச. 14-

தமிழ்நாடு காகித ஆலையில் காவல்துறை 2ம் நிலை காவலர் தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு நிறைவு விழா மற்றும் ரூ.ஒரு லட்சத்து 40 ஆயிரம் மதிப்புள்ள மருத்துவ உதவித் தொகைக்கான காசோலை, மருத்துவ உபகரணங்கள் வழங்கும் விழா ஆகியவை நடந்தது.



காகிதபுரம் டிஎன்பிஎல்லில் நடந்த விழாவில் செயல் இயக்குனர்(இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர்கள் (மனித வளம்) பட்டாபிராமன், (உற்பத்தி) தங்கராஜூ ஆகியோர் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். அருகில் உதவி பொது மேலாளர் (பாதுகாப்பு) தஞ்சராயன்.

2ம் நிலை காவலர் பயிற்சி வகுப்பு கடந்த 40 நாட்களாக நடந்தது. இதில் கரூர், சேலம், ஈரோடு, திருச்சி, பெரம்பலூார், நாமக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த 11 பெண்கள் உட்பட 55 பேர் கலந்து கொண்டனர்.

அதேபோல ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கரோனா தொற்று சிகிச்சைக்காக ரூ. 66 ஆயிரம் மதிப்புள்ள முகக்கவசம், தெர்மாமீட்டர், கையுறை உட்பட மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும் 4பேருக்கு இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் சிகிச்சைக்காக ரூ.ஒரு லட்சத்து 40 ஆயிரத்திற்கான காசோலை வழங்கப்பட்டது.

காகித ஆலை செயல் இயக்குனர்(இயக்கம்) கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர்கள் (மனித வளம்) பட்டாபிராமன், (உற்பத்தி) தங்கராஜூ ஆகியோர் நலத்திட்டங்களை வழங்கினர். உதவி பொது மேலாளர் (பாதுகாப்பு) தஞ்சராயன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## காலைக்கதிர் (10.12.2020

# டி.என்.பி.எல்., சார்பில் நலத்திட்ட உதவி

கரூர், டிச. 10-

கரூர் காகிதபுரத்திலுள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. செயல் இயக்குனர் கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

காவலர் போட்டி தேர்வில் பங்கேற்ற, 55 பேருக்கு சான்றிதழ்கள், ஓலப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு, கொரோனா தொற்று நோய் சிகிச்சைக்காக, 66 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள முக கவசம், தெர்மாமீட்டர், கையுறை, பல்ஸ் ஆக்ஸிமீட்டர் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும், ஆலை பகுதியைச் சேர்ந்த பாஸ்கரன், நாராயணன், அருக்காணியம்மாள், முகமது யாசீர் ஆகியோருக்கு, இருதய அறுவை மற்றும் புற்றுநோய் சிகிச்சைக்காக, 1.40 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. முதன்மை பொது மேலாளர்கள் பட்டாபிராமன் (மனித வளம்), தங்கராஜூ (உற்பத்தி) உள்பட பலர் பங்கேற்றனர்.


